Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-35 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி வைகாசி 6 ஆம் நாள் முஹர்ரம் 6 19-5-64 செவ்வாய்க்கிழமை இதழ் 93

# கூட்டு ஆட்சி அமைப்பு; மந்திரிகள் ஆலோசனை

## விரைவில் முடிவுகாண பிரதமர் வலியுறுத்தல்

கொழும்பு, திங்கள்

திருமதி சிறிமா பண்டாரநாயக்காவைப் பிரதமமந்திரியாகக் கொண்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தின் மந்திரிசபை இன்று கூடி இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்து கூட்டரசாங்கம் அமைப்பது பற்றி ஆலோசனை நடத்தியது.

கூட்டரசாங்கம்பற்றி இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பற்றியும் எந்த அடிப்படையில் கூட்டுமந்திரிசபை அமைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறதென்பதுபற்றியும் பிரதமர் விளக்கிக் கூறியதாகத் தெரிகிறது. கூட்டுமந்திரிசபை அமைப்பதுபற்றி விரைவில் ஓர் இறுதி முடிவுசெய்ய வேண்டியதன் அவசியத்தையும் பிரதமர் எடுத்துக் கூறினராம்.

கூட்டரசாங்கம் அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாக இடதுசாரி ஐக்கிய முன்னணி சமர்ப்பித்த மகஜரையும் பிரதமர் மந்திசபைமுன் சமர்ப்பித்ததாகவும் அறியப்படுகிறது.

திரு. பிலிப் குணவர்த்தனவையும் கம்யூனிஸ்ட்கட்சித் தலைவரையும் மந்திரிசபையில் சேர்ப்பதனல் பல சிக்கல்கள் தோன்றுமென மந்திரிகள் சிலர் எடுத்துக் கூறியதாகவும் தெரிகிறது.

## மார்க்ஸிஸவாதிகள் என்றால் ஒதுக்கிவைக்கவேண்டுமா?

### என். எம் பிலிப்புக்காக குலரத்தின வக்காலத்து

கொழும்பு, திங்கள்

"டாக்டர் என். எம். பெரேராவும், திரு. பிலிப் குணவர்த்தனவும் இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காக பல வருடங்கள் உழைத்ததினல் அதிக கஷ்டத்திற்குள்ளாகி விட்டார்கள் அவர்கள் மார்க்ஸிஸவாதிகள் என்ற காரணத்தினல் அரசாங்கத்திலிருந்து ஒதுக்கி வைப்பது புத்தியல்ல. அவர்கள் அரசாங்கத்துடன் சேருவதனல், சுதந்திரக் கட்சி நடுவழிப் பாதையிலிருந்து விலகிவிடும் என்று அர்த்தமல்ல"

அம்பலாங்கொடையில் இன்ஸூரன்ஸ் கிளை ஸ்தாபன திறப்புவிழாவில் பேசுகையில் அம்பலாங்கொடை எம். பி. திரு. பீ. டி. எஸ். குலரத்தின மேற்கண்டவாறு கூறினர்.

சுதந்திரக்கட்சியில் நல்ல அனுபவம் வாய்ந்த குலரத்தின போன்றவர்கள் இருக்கும்போது எதற்காக மார்க்ஸிசவாசிகளை சேர்க்கவேண்டும் என்று தனக்கு விளங்கவில்லையென பலப்பிட்டிய எம். பி. திரு. ஆர். லக்ஷ்மன் டி சில்வா கூறியதை தொடர்ந்தே திரு. குலரத்தின மேற்கண்டவாறு பதிலளித்தார்.

பௌத்த மதத்தைப்பற்றி சரிவர என்றும் தெரியாதவர்களே, நடுவழிப் பாதையிலிருந்து அரசாங்கம் விலகிவிடுமென கூச்சல்போடுவதாக திரு. குலரத்தின தொடர்ந்து பேசும்போது கூறினர்.

நிதிமந்திரி திரு. ரி. பி. இலங்கரத்தின, இன்ஸூரன்ஸ் கிளை ஸ்தாபனத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கம் நாட்டுமக்களின் பொருளாதார சுதந்திரத்தைப் பெற போராடிவருகிறதென்றும், உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு அரசாங்கம் இறக்குமதியில் அதிக கட்டுப்பாடு செய்திருப்பதாகவும் கூறினர்.

## தாக்குதலுக்குப் பின் பேச்சுக்கு அழைப்பு!

### லாவோஸ்: அமெரிக்கா ஆலோசனை

வியன்டைன், மே 18

லாவோசில் இடதுசாரிப் பதட்லாவோ படைகள், வலதுசாரிப் படைத் தலைமைக் காரியாலயத்தின் மீது இரு முனைகளில் கடும் தாக்குதல் நடத்திய பின், லாவோஸ் நிலைமை பற்றிப் பேசுவதற்கு வருமாறு பிரதமர் சுவர்ணபூமாவை, இடதுசாரித் தலைவர் சுவன்னவாங் அழைத்துள்ளார்.

கொங்கெக்கிலுள்ள தமது தலைமைக் காரியாலயத்துக்கு வருமாறு அழைத்துள்ள சுவன்னவாங், லாவோசுக்கான ஜெனிவா மகாநாட்டுத்துணைத் தலைவர்களான பிரிட்டிஷ், சோவியத் யூனியன் வெளிவிவகார மந்திரிகளையும் லாவோசுக்கான சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷன் அங்கத்தவர்களான இந்தியா, போலாந்து, கனடா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளையும் பேச்சு வார்த்தைக்கு அழைத்து வருமாறும் சுதன்னவாங் கேட்டுள்ளார்.

லாவோஸ் நிலைமை குறித்து வாஷிங்டனில் அமெரிக்க வெளிவிவகார மந்திரி திரு. டீன்றஸ்க், பிரிட்டிஷ், சோவியத், இந்தியா, கனடா, போலந்து தூதர்களுடன் ஆலோசனை நடத்தியிருக்கிருர். தென் கிழக்காசிய பாதுகாப்பு ஒப்பந்த ஸ்தாபன நாடுகளின் தூதர்களையும் அவர் சந்தித்துப்பேசினர்.

## திருமண அழைப்பு

நிகழும் குரோதி வருடம் வைகாசித் திங்கள் 10-ம் நாள் (23-5-64) சனிக்கிழமை இரவு 10-26 தொடக்கம் 11-24 வரையுள்ள மகரலக்கின சுபமுகூர்த்த வேளையில் எமது கனிஷ்ட புத்திரன் செல்வன் நவரெத்தினத்திற்கும் (கொழும்பு தெற்கு ஆஸ்பத்திரி, தெஹிவளை) திரு. க. சி முத்துத்தம்பி (வியாபாரம், பெயிலி வீதி, கொழும்பு) திருமதி செல்லம்மா முத்துத்தம்பி அவர்களின் சிரேஷ்ட புத்திரி செல்வி மனேன்மணிக்கும் மணமகள் இல்லத்தில் (செல்வநாயகம்வீதி, வேலணை கிழக்கு, வேலணை) நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திலும், அத்தருணம் மணமகன் இல்லத்தில் மாலை 6 மணிக்கு நடைபெறவிருக்கும் விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு நண்பர்களையும். உறவினர்களையும் அழைக்கின்றோம். விசேட அழைப்புகள் இல்லை.

இப்படிக்கு,

திரு. க. கதிரவேலுவும் பாரியாரும். (மலர்மகம் மரக்காலை உரிமையாளர்) 395, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 423

## கூட்டுறவு கடைகளில் காய்கறி விதைகள்

கொழும்பு, திங்கள்

ஏராளமான ஐக்கிய கூட்டுறவு சங்கங்கள், காய்கறி விதைகள் தேவையென விவசாய இலாகாவிற்குத் தெரிவித்துள்ளன. இவ்விதைகள் வழக்கமான விலையிலும் பார்க்கக் குறைவாக விற்கப்படும்.

நியாயவிலை காய்கறி விதை திட்டம்பற்றி பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு, விவசாய அதிகாரி திரு. மகிந்த சில்வா விரிவாக கடிதம் எழுதியுள்ளார்.

## காணி கொடுத்தது பற்றி பத்திரிகை

கொழும்பு, திங்கள்

வடபகுதியில் தர்மபுரம் என்ற குடியேற்றத்திட்டத்தில் 500 சட்டவிரோதக் குடியேற்றக்காரருக்கு காணிகொடுக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதென்று 'ஜனதா' என்ற சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## 1,000 குடும்பங்களுக்கு நிலம்

திருகோணமலை, திங்கள்

அரசாங்கத்துக்குச் சொந்தமான 4,000 ஏக்கர் நிலம் பெரியகுளம் என்னும் இடத்தில் 1,000 குடும்பங்களுக்குக் கொடுக்கப்படவிருக்கிறது. அடுத்தமாதம் 29-ம் திகதி கச்சேரியில் காணி கொடுப்பதற்கான தெரிவு நடைபெறும்.

## விவசாயிகளுக்கு பாதுகாப்பு

கொழும்பு, திங்கள்

காணிச் சொந்தக்காரர்களால் பயமுறுத்தப்படும் நிரந்தரமான விவசாயிகளுக்குப் பாதுகாப்பளிக்கும்படி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலை உணவு விவசாய மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கேட்டுள்ளார்.

## கட்டாய ஓய்வு உத்தரவு பெற்ற ஸ்தலஸ்தாபன ஊழியர்

யாழ்ப்பாணம், செவ்.

ஸ்தலஸ்தாபன சேவையின் சிறு சேவையாளரும் பருத்தித்துறை நகரசபைப் பியோனகக் கடமையாற்றியவருமாகிய திரு. இ. சுப்பிரமணியம் அந் நகரசபையினல் கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பட்டணசபையின் சேவையிலிருந்த திரு. சுப்பிரமணியம் சென்ற ஜனவரி மாதம் பட்டணசபையின் அந்தஸ்தை நகரசபையாக உயர்த்தப்பட்டதும் அவருக்கு நகரசபையினல் கட்டாய ஓய்வுகொடுக்கப்பட்டது. கட்டாய ஓய்வு உத்தரவை எதிர்த்து ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனுக்கு மனுச் செய்த திரு சுப்பிரமணியத்திற்கு வேலை கொடுக்குமாறு, நகரசபைத் தலைவரைக் கமிஷன் கேட்டிருந்தும் தலைவர் வேலைகொடுக்க மறுத்துவிட்டாரென்றும் தெரிகிறது.

ஸ்தலஸ்தாபன சபையான பருத்தித்துறை பட்டணசபை அந்தஸ்து உயர்த்தப்பட்டு நகரசபையாகும்பொழுது பட்டணசபையில் வேலைசெய்தவர்கள் அத்தனை பேரையும் நகரசபைச் சேவையிலமர்த்த வேண்டியதே நியதியென்று ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் நகரசபைத் தலைவருக்கு எடுத்துக் காட்டியுள்ளது. ஆனல் பருத்தித்துறை நகரசபை உபவிதிகளின்படி கட்டாயஓய்வு திரு. சுப்பிரமணியத்துக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும் அவருக்குத் திரும்பவும் வேலை கொடுக்கமுடியாதுஎன்றும் நகரசபைத் தலைவர் அறிவித்துவிட்டார்.

இக்கட்டாய ஓய்வு உத்தரவுக்கு எதிராக யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோர்ட்டில் வழக்குத் தாக்கல்செய்ய திரு. சுப்பிரமணியம் நடவடிக்கைகள் எடுப்பதாகத் தெரிகிறது.

## ஏயர் சிலோன் தொழிலாளர் கூட்டம்

கொழும்பு, திங்கள்

ஏயர் சிலோன் தொழிலாளர்களின் 3 சங்கங்களும் இவ்வார இறுதியில் ஒன்ருகக்கூடி ஏயர்சிலோன் விசாரணைக் கமிட்டியின் அறிக்கை பற்றி விவாதிக்குமென அறியப்படுகிறது.

இக்கூட்டத்திற்கு நான்காவது சங்கமான ஏயர் சிலோன் ... யூனியனுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது

## மணிவாக்கு

யாருக்கு அருள் செய்ய விரும்புகிறேனே முதலில் அவரது செல்வத்தை மெதுவாக அகற்றுவேன். அவர் ஏழையானதும் உற்றார் கைவிடுவர். மீண்டும் செல்வம் பெறச் செய்யும் முயற்சியும் பலிக்காமல் ஏமாற்றமடைந்து பின்னர் என் உண்மை பக்தர்களிடம் அவர் நட்புக் கொள்ளவே (உண்மையை அறிய) என் அருளை அவர் மீது சொரிவேன்.

— ஸ்ரீமத்பாகவதம்

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram. EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு
வைகாசி ீ 6 உ (19-5-64)

## தமிழ்ப்பகுதிகளில் சிங்கள போதனை?

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ்ப்பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர்களில் இரண்டாயிரம் பேரை அனுப்பி தமிழ்ப் பிள்ளைகளுக்குக் கட்டாயமாகச் சிங்களம் கற்பிக்கச் செய்ய அரசாங்கம் செய்துள்ள முடிவை தமிழரசுக்கட்சியின் செயற்குழு எதிர்த்துத் தீர்மானமொன்று நிறைவேற்றியுள்ளது. சிங்கள ஆசிரியர்களை தமிழ்ப்பகுதிகளுக்கு அனுப்புவதென்ற முடிவு தமிழ்பேசும் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையில் மேலும் மனக்கசப்பை உண்டாக்குமென்று அத்தீர்மானம் எச்சரித்துள்ளதுடன் இவ்வித கொள்கை, மொழி முதலிய பிரச்னைகளை நியாயமாகவும் கௌரவமாகவும் தீர்க்கப்பட வேண்டுமென்று பிரதமமந்திரி அண்மையில் கூறியதற்கு நேர்மாறாகுமென்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

தனிச் சிங்களச்சட்டம் செல்லாதென்றும் இது அரசியல் அமைப்புச் சட்டத்தின் 29-வது விதிக்கு முரணாகுமென்றும் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் சமீபத்தில்தான் ஒரு முக்கியமான தீர்ப்பு அளித்துள்ளது. இதன்மீது சுப்ரீம் கோர்ட்டுக்கு அரசாங்கம் அப்பீல் செய்து கொண்டிருப்பினும் அப்பீல் முடிவுகள்கடைசியாகத் தெரியும்வரை தனிச் சிங்களச் சட்டத்தை அமுல் நடத்த வேண்டாமென்று சொலிஸிட்டர் ஜெனரல் அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியிருப்பதாக ஒருசெய்தி தெரிவித்தது. இதை அரசாங்கம் மறுக்கவில்லை. இதற்குப் பதில் தங்கள் சட்ட அதிகாரி கூறிய யோசனையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அரசாங்க சிப்பந்திகள் விஷயமாக இச்சட்டத்தை அமுல் நடத்தாதென்றும் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. இது உண்மையாயின் அது வேவிவேகமான ஒரு முடிவாகும். இதேசமயம் பள்ளிக்கூடங்களில் புதிதாக சிங்களத்தைப் போதிப்பதென்பதும் மொழி சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும் ஒருமுக்கிய நடவடிக்கையே. ஆகையால் இதையும் ஒத்திவைக்க வேண்டியதே நியாயமாகும்.

மொழிச்சட்டம் நிறைவேறுவதற்கு முன்பாக யாழ்ப்பாணத்திலே பல கல்லூரிகளில் தமிழ் மாணவர் சிங்களம் கற்று வந்தனர். ஆகவே சிங்களமொழி மீது அவர்களுக்கு வெறுப்போ துவேஷமோ கிடையாது. ஆனால் தனிச்சிங்களச் சட்டத்தை பலத்த எதிர்ப்புக்கிடையே நிறைவேற்றி அதை கட்டாயமாக அமுலுக்குக் கொண்டுவர முற்பட்டதும் தமிழுக்கு எவ்வித அந்தஸ்து மளிக்காமல் ஒதுக்கியதும் தான் இப்பகுதியில் சிங்களம் கற்பிப்பது கைவிடப்பட்டது. இந்நிலையில் இரண்டாயிரம் சிங்கள ஆசிரியர்களை இப்பகுதிகளுக்கு அனுப்பி பள்ளிக்கூடங்களில் கட்டாயமாக சிங்களம் போதிக்கச் செய்வதாயின் மீண்டும் கிளர்ச்சிகள் ஏற்படவும் இருசமூகங்களின் உறவுகள் மேலும் மோசமாகி நாட்டு முன்னேற்றம் தடைப்படவும் செய்யும்.

தமிழ்ப்பகுதிகளுக்குச் செல்லும் சிங்கள ஆசிரியர்களுக்குத் தமிழ் தெரிந்திருக்க வேண்டுமென்று ஒரு நிபந்தனை போடப்பட்டுள்ளதாம். இதிலிருந்து சிங்கள ஆசிரியர்கள் தமிழ் கற்றிருக்க வேண்டிய அவசியத்தை அரசாங்கமே உணர்ந்து ஒப்புக் கொள்வதாகின்றது. அரைகுறை கொச்சைத் தமிழ்பேசும் சிங்கள ஆசிரியர் இங்குவருவதாயின் அவர்கள் பரிகாசத்துக்கு உள்ளாகி தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாது போகும். திறமையாக அவர்கள் கடமையாற்ற வேண்டுமாயின் முறையாக அவர்கள் தமிழ் பயின்றிருக்க வேண்டும். இதுவரை அரசாங்கம் அதற்கான வசதியைச் செய்யவில்லை. அப்படி இருக்கையில் திடீரென அவசரக்கோலம் அள்ளித் தெளித்ததுபோல் அரசாங்கம் மொழிச்சட்டத்தை அமுல் நடத்துவது நேர்மையற்றதுடன் நேர்மாறான பலனே அளிப்பதாக இருக்கும்.

மொழிப் பிரச்னையைத் தீர்ப்பது கூட்டு அரசாங்கம் அமைப்பதின் முக்கிய நோக்கத்திலொன்று எனப் பிரதமர் ஒரு கூட்டத்தில் பேசுகையில் அறிவித்தார். கூட்டு அரசாங்கம் அமைப்பதுபற்றிய முக்கிய பேச்சுகள் இப்போது நடைபெற்று வருவதாகத்தெரிகிறது. இந்நிலையில் ஏற்கனவே சிக்கலாகியுள்ள மொழிப்பிரச்னையை மேலும் சங்கடமாக்கக்கூடிய எவ்வித நடவடிக்கையையும் அறிவுள்ள எந்த அரசாங்கமும் எடுக்க முடியாது. இது நீதிமன்றத் தீர்ப்புக்கும் மாறுகுமாதலால் இவ்விஷயத்தில் அவசரப்படாமல் மொழிப்பிரச்னை சுமுகமாகத் தீரும்வரை இதைப் பிரதமர் ஒத்திவைக்க வேண்டும்.

# தமிழ்மறைக் கழகத்தின் திருக்குறள் மகாநாடு

### கவியரங்கம், கருத்தரங்கம், விரிவுரைகளுடன் கரணவாயில் மூன்றுநாள் நடைபெறும்

கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் நடைபெறும் தமிழ் மறைக் கழகத்தின் பன்னிரண்டாவது திருக்குறள் மாநாடு கரணவாய் உபதபாற்கந்தோருக்கு அருகிலுள்ள பூதன்தேவனார் அரங்கில் நடைபெறும். ஈழத்தின் சங்கப் புலவராகிய பூதன்தேவனாரை நினைவுறுத்துதற்கே இந்த அரங்குக்கு அவருடைய பெயரை இட்டுள்ளனர்.

**முதல் நாள்**

24-5-64 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு மாநாடு திருக்குறட் சுவடி ஊர்வலத்துடன் தொடங்கும். மாநாட்டுக்குத் தமிழ்மறைக் கழகத் தலைவர் பேராசிரியர் கா. பொ. இரத்தினம் தலைமை தாங்குவார். ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் மாநாட்டைத் தொடக்கி வைப்பார். பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை, பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் இ. க. முருகேசு, வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம், வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் முதலானோர் விரிவுரை நிகழ்த்துவர். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவர்களின் நடனமும் நாடகமும் நடைபெறும்.

**இரண்டாம் நாள்**

உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவ

(6-ம் பக்கம் பார்க்க)

# களத்துமேடு

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியூருக்கு ஏற்றுமதியாகும் ஒரேயொரு பொருள் உண்டு. அது என்ன தெரியுமா? நல்லெண்ணை, பனட்டு, ஒடியல், சீமெந்து, கருவாடு —இல்லை! புகையிலை. யாழ்ப்பாணம்-மலையாளம் புகையிலைக் கம்பெனியின் மூலம் வருடாவருடம் யாழ்ப்பாணத்துப் புகையிலை திருவாங்கூருக்கு அனுப்பப்படுகிறது. யாழ்ப்பாணத்துக்கு இந்தப் பெரிய கௌரவத்தைத் தேடித்தரும் புகையிலை-தான் இங்கு அதிக வருமானம் தரக்கூடிய காசுப் பயிர்.

இப்பொழுது புகையிலை அறுவடைசெய்யப்படும்காலம். தென் இந்தியாவில் சிவபுரிப் புகையிலைக்குக் கிராக்கி இருப்பதுபோல இங்கேயும் தாவடிப் புகையிலைக்குத் தான் நல்ல கிராக்கி. அன்றொரு நாள் தாவடி வழியாகப் போகும்போது பிரசித்தி பெற்ற இந்தப் புகையிலை அறுவடை செய்யப்படுவதையும், வண்டிவண்டியாக அது புகைக்கூடங்களுக்கு எடுத்துச்செல்லப்படுவதையும் பார்த்தேன். தோட்டக்காரர் வண்டிகளை அனுப்பிவிட்டுத் தோட்டத்தில் அடுத்தபடியாக விளைவிக்கப்போகும் மாற்றுப் பயிரைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தார். அவரோடு சிறிது நேரம் அளவளாவினேன்.

புகையிலை 4, 5 மாதப்பயிர். யாழ்ப்பாணத்திலே பொதுவாகப் புரட்டாதி, கார்த்திகை மாதங்களில் பயிரிட்டுப் பங்குனி, சித்திரையில் அறுவடையாகும். புகையிலைக் கன்றுக்குத் தண்ணீர் தேங்கி நிற்காத நிலம் அவசியம். தாவடி, இணுவில், சுன்னாகம், கோண்டாவில் முதலிய இடங்களிலுள்ள இருவாட்டி நிலம் இதற்கு மிகவும் உகந்தது. மாரிகாலம் தொடங்கியவுடனே நிலத்தை 3 அல்லது 4 அடி ஆழத்துக்கு வெட்டிப் பச்சைக் குழை தாழ்ப்பார்கள். சிலர் புகையிலைக்காம்புகளையே பசளையாக்குவதுமுண்டு. பச்சைக் குழை, எரு எல்லாவற்றையும்விட புகையிலைக் காம்பு தான் புகையிலைக்குச் சிறந்த பசளையாம். காம்புகளிலுள்ள காரச்சத்தைக் கிரகிக்கும் கன்றுகளின் இலை தடித்துப் பருத்துச் சாறு நிறைந்ததாய் வளரும். சில இலைகள் ஒரு புடலங்காய் நீளத்துக்கும் வளருமாம்.

பச்சைக் குழை ஒரு வண்டி 50, 55 ரூபாய் விற்கும். மாட்டெரு 60 முதல் 75 ரூபாயும் விற்கும். புகையிலைக் காம்பு 75க்குமேலும் விற்கும். இரண்டு பரப்புக்கு ஒரு வண்டியாகப் பசளை போடுவார்கள். புகையிலைக் கன்றுகளில் 5 அல்லது 6 இலை வந்துகொண்டிருக்கும் போதே தரகுகாரர் வந்து அப்படியே முழுத் தோட்டமாயே விலைபேசிவிடுவார்கள். தோட்டக்காரர் தாமே புகையிலையைப் பதப்படுத்துவதுமுண்டு.

இலங்கையில், யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும், நீர்கொழும்பிலும், தாமன்கடவையிலும் தெற்கே சில இடங்களிலும் புகையிலை உற்பத்தியாகிறது. எங்கும் பெயர்போன யாழ்ப்பாணச் சுருட்டு, யாழ்ப்பாணப் புகையிலையிலேயே தயார்செய்யப்படுகிறது. மற்றைய இடங்களில் உற்பத்தியாகும் புகையிலை காரத்தில் குறைவாதலினால் சிகரெட் செய்வதற்குப் பயன்படுகின்றது. சுருட்டைப் பார்க்கிலும் சிகரெட்டுக்கு மதிப்பு அதிகமுண்டு. எனவே சிகரெட் புகையிலைக்கும் நல்ல கிராக்கியுண்டு. இதனால்தான்போலும் அரசாங்கமும் சிகரெட் புகையிலை உற்பத்திக்கே கூடிய ஆதரவளித்துவருகிறது.

யாழ்ப்பாணத்துப் புகையிலை உற்பத்தியாளர்களைப் பொறுத்தவரையில் அரசாங்கம் அவர்களுக்குச் செய்யும் உதவி பூஜ்யம் தான். இவர்கள் அரசாங்க உதவியை நாடுவதுமில்லை. நெற்பயிர் செய்வோர், தென்னந்தோட்டக்காரர் முதலியவர்களுக்கு அரசாங்கம் பசளை, உரம், நாற்று, தோட்டக் கருவிகள் முதலியவற்றை இலவசமாகவோ, கடனாகவோ கொடுத்துவருகிறது. புகையிலை செய்பவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் இப்படிப்பட்ட உதவி எதுவுமில்லை.

சிவபுரிப் புகையிலையைப் போல வாசனைத் திரவியங்கள் இட்டு வெற்றிலையோடு வாயில் போடும் புகையிலையை இங்கு தயாரிக்கமுடியாதா என்று அந்தத் தோட்டக்காரரை வினவினேன். அப்படிப்பட்ட ஒரு முயற்சியை இதுவரை எவரும் மேற்கொள்ளவில்லை என்றும், வெறும் புகையிலையைத் துண்டு துண்டாக நறுக்கியே 'தின்னும்' புகையிலையாகக் கொடுக்கிறார்கள் என்றும் சுருட்டுச் சுற்றுவதற்குத்தான் யாழ்ப்பாணம் புகையிலை போதுமானதென்றும் அவர் சொன்னார்.

வலிகாமம் வடக்குப் பகுதிகளில் ஏராளமான நிலம் வெற்று நிலமாய்க் கிடக்கின்றது. இதைப் பயன்படுத்திப் புகையிலைத்தோட்டமாக்கினால் எவ்வளவோ லாபம் கிடைக்குமென்பதைச் சொல்லவேண்டியதில்லை. பணமுதலீடும், புது முயற்சிகளில் ஊக்கமும் உள்ளவர்கள் தைரியமாக முன்வரவேண்டும்.

— கலப்பை

## ஐயாறன் எழுதுவது

கொழும்பிலே ஓர் அரசாங்க இலாகாவிலிருந்து தமக்குக் கிடைத்த ஒரு கடிதத்துடன் தமிழன்பர் ஒருவர் வந்தார். அவர் கூறுவதைக் கேளுங்கள்.

"அரசாங்கத்துக்கு வர்த்தக விஷயமாக சிறிது பணம் கட்ட வேண்டி இருந்தது. அப்பணத்துக்கு 'செக்' வைத்து, அத்துடன் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒரு கடிதமும் அனுப்பியிருந்தேன். பணம் பெற்றுக்கொண்டதற்காக ஒரு பற்றுச் சீட்டை சிங்களத்தில் எழுதி அனுப்பியிருந்தனர்.

அப்பற்றுச்சீட்டை சிங்களம், ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் அச்சிட்டிருந்தனர். ஆனால் சிங்களத்தில் மட்டுமே ஏதோ எழுதி அனுப்பி இருந்தனர். ஆங்கிலத்திலும் அச்சிட்டிருப்பவர்கள், அதே மொழியில் எழுதி இருக்கலாமல்லவா? சிங்களம் எனக்குப் புரியவில்லை. அதனால் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் அதை எழுதி அனுப்பும்படி, அந்த ரசீதையும் திருப்பி அனுப்பினேன்.

அதற்கு ஒரு பதில் சிங்களத்தில் ஆங்கில மொழி பெயர்ப்புடன் கிடைத்துள்ளது. என்ன தெரியுமா? "சிங்களம் இந்நாட்டின் அரசாங்க மொழி என்பதை தயவு செய்து அறிந்து கொள்ளவும். தங்களுக்கு அது புரியாதாயின், அதைத் தங்களுக்குப் புரியக்கூடிய மொழியில்,மொழி பெயர்க்கத்தக்கவர்களை நீங்கள் நியமித்துக் கொள்ளுங்கள்" என்று குறிப்பிட்டிருந்தனர்.

இந்த மனப்பான்மை ஏகாதிபத்திய ஆட்சியைநினைப்பூட்டுவதாகவும் வீண் மனக்கசப்பை ஏற்படுத்துவதாகவுமுள்ளது. ஆங்கிலத்தில் கடிதம் எழுதுபவருக்கு ஆங்கிலத்திலேயே பற்றுச் சீட்டு கொடுக்க முடியாதா? முடியாதெனின் ஏன், அந்த ரசீதில் ஆங்கிலத்திலும் அச்சடித்துள்ளனர்? இந்த மனப்பான்மையுள்ளவரை இந்நாட்டில் எப்படி சமூக ஒற்றுமை ஏற்பட முடியும்?... என்று மிக உணர்ச்சியுடன் பொழிந்து தள்ளினார்.

பற்றுச்சீட்டிலே ஆங்கிலத்திலேயே எழுதி இருந்தால் இந்தச் சங்கடமெல்லாம் இருந்திராது. கடிதத்துக்கு ஆங்கிலத்திலே மொழி பெயர்ப்பும் வைத்துள்ளவர்கள், அந்தப் பற்றுச் சீட்டையும் இருமொழிகளிலும் எழுதப்படாதா? அதிலுள்ளதை சுலபமாகப் புரிந்துகொள்ள இந்நாட்டுப் பிரஜைக்கு உரிமை கிடையாதா? சிங்களம் தெரியாத ஒவ்வொருவரும் ஒரு மொழி பெயர்ப்பாளரை வைத்துக்கொள்ள வேண்டுமா? தனிச்சிங்களச் சட்டம், அரசியல் சட்டத்துக்கு மாறானது என்று நீதி மன்றம் தீர்ப்பளித்தும் கூட இந்த மனப்பான்மை மாறவில்லையே! கூட்டரசாங்கம் ஏற்படும் போதாவது இது மாறுமென்று எதிர்பார்க்கலாமா?

* * *

செனெட்டர் சு. நடேசபிள்ளை, சென்ற ஞாயிறன்று, ராமநாதன்கல்லூரியில், நிகழ்த்திய சைவசித்தாந்த சிறப்புச் சொற்பொழிவைக் கேட்க, பல ஆசிரியர்களும், கல்லூரி அதிபர்களும் வந்திருந்தனர். அவர்களில் பலர் நோட்டுப் புத்தகம் கொணர்ந்து, கவனமாக எழுதிக்கொண்டதைப் பார்த்தேன்.

சமய பாடத்தை இப்போது கல்லூரிகளில் போதிக்கும் கடமை திடீரென பல ஆசிரியர்களுக்குக் கிடைத்துள்ளது. இதற்கான பயிற்சி ஏதும் அவர்களுக்கு அளிக்கப்பட்டதா என்று விசாரித்த போது, அப்படி எதுவுமில்லை என்றும், ஏதோ புத்தகத்தை வைததுக்கொண்டு தமக்குத் தெரிந்ததைக் கற்பிப்பதாக ஒரு கல்லூரி அதிபர் கூறி

(6-ம் பக்கம் பார்க்க)

# லாவோஸ்: நடுநிலைமைப் படைத்தலைமைநிலையம் இடதுசாரிகள் வசமானது

## வியன்டைனைநோக்கி கம்யூனிஸ்ட் துருப்புக்கள் முன்னேறுகின்றன

### சண்டையை நிறுத்த உதவுமாறு பிரிட்டன், ரஷ்யாவுக்கு பிரதமர் கோரிக்கை

வியன்டைன், மே 18

லாவோசில் ஜார்ஸ் சமவெளிக்கு அருகிலுள்ள நடுநிலைமைப் படைத் தலைமைக் காரியாலயத்தை இடதுசாரி பதட்லாவோப் படைகள் முற்றுகையிட்டுக் கைப்பற்றிக் கொண்டதாகவும் நடுநிலைமைப் படைத் தளபதி ஜெனரல் கொங்லீயும் அவரது படையினரும் இடதுசாரிப் படைகளை எதிர்த்து கொரில்லாக்களுடன் சேர்ந்து போராடுவதற்காக மலைப் பகுதிகளுள் புகுந்துள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன. இடதுசாரி பதட்லாவோப் படையின் மூன்று அணிகள் நிர்வாகத் தலைநகர் வியன்டைனுக்கு சமீபத்தில் முன்னேறி வந்துகொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

நடுநிலைமைப் படையின் தலைமைக் காரியாலயத்தை இடதுசாரிப் பதட்லாவோ படைகள் வடக்கிலும் தெற்கிலுமாக இருமுனைத் தாக்குதல் நடத்தியதாகவும் திட்டமிட்டு பெரும் பீரங்கிகள் கொண்டு தாக்கியதாகவும் வடக்குவியட்நாமின் துணையுடன் இத்தாக்குதல் நடந்ததாகவும் செய்திகள் கூறுகின்றன.

1961-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் இடதுசாரியினர் தாமாகவே செய்து கொண்ட போர்நிறுத்த எல்லையைமீறி வியன்டைனுக்குள் பிரவேசிப்பதற்கு முன்னேறி வந்து கொண்டிருப்பதாகவும் மீக்கொங் நதிக்கு 75 மைல் தூரத்தில் இடதுசாரி அணிகள் வந்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இடதுசாரிப படையினரின் தாக்குதல் காரணமாகலாவோசுக்கான சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷன் அங்கத்தவர்களான இந்தியா, கனடா, போலந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் ஹெலிகொப்டர் மூலம் பாதுகாப்பான இடங்களுக்கு அகற்றப்படுகின்றனர்.

**பிரதமர் பூமா வேண்டுகோள்**

லாவோசில் சண்டையை நிறுத்த உடனடியாக இயன்ற நடவடிக்கை எடுக்குமாறு லாவோசுக்கான சர்வதேச மகாநாட்டின் இணைத்தலைவர்களான பிரிட்டனையும் சோவியத்யூனியனையும் லாவோஸ் பிரதமர் இளவரசர் சுவன்ன பூமா கேட்டுக் கொண்டுள்ளார்.

சண்டையை உடனடியாக நிறுத்த உத்தரவிடுமாறு இடதுசாரித் தலைவர் சுவன்னவாங்கையும் இளவரசர் பூமா கேட்டுள்ளார்.

இதேசமயம் தன்னுடன் பேச்சு நடத்த வருமாறு இளவரசர் சுவன்னபூமாவை இடதுசாரித் தலைவர் சுவன்னவாங் அழைத்துள்ளார்.

**அமெரிக்கா ஆலோசனை**

லாவோஸ் நிலைமை குறித்து அமெரிக்க வெளிவிவகார மந்திரி திரு. டீன்றஸ்க் வாஷிங்டனிலுள்ள சோவியத், பிரிட்டிஷ் தூதர்களுடன் நேற்று அவசரமாக ஆலோசனை நடத்தினர்.

மாஸ்கோவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகர் இன்றுசோவியத் வெளிவிவகார மந்திரியைச் சந்தித்து ஆலோசனை நடத்துவாரென அறியப்படுகிறது.

---

## "காஷ்மீர் ஆட்சி உரிமையை கைவிடமாட்டோம்"

### பம்பாயில் திரு. சாஸ்திரி அறிவிப்பு

பம்பாய், மே 18

"காஷ்மீர் சம்பந்தமாக ஐ. நா. பாதுகாப்புச்சபை அங்கத்தவர்கள் எவ்வித அபிப்பிராயத்தைத் தெரிவித்த போதிலும் காஷ்மீரிலுள்ள தனது ஆட்சி உரிமையை இந்தியாஒருபோதும் கைவிடாது' என்று இந்திய மத்தியமந்திரி திரு. லால்பகதூர்சாஸ்திரி நேற்று இங்கு நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் அறிவித்தார்.

காஷ்மீர் விஷயத்தில் இந்தியாவின் கௌரவத்தையும் உண்மை நெறியையும் பாதிக்காத எந்த ஒரு தீர்வையும் இந்தியா ஏற்றுக் கொள்ளுமென்றும் இப்போதைய காஷ்மீரின் அந்தஸ்தையும் இந்தியாவின் கௌரவத்தையும் பாதிக்கக்கூடிய மூன்றுவது கட்சியின் குறுக்கீடு எதையும் இந்தியா பொறுத்துக்கொள்ளாதென்றும் திரு. லால்பகதூர்சாஸ்திரி தெரிவித்தார்.

இந்தியாவில் கலகங்களைத் தோற்றுவித்து அவற்றை காஷ்மீர் பிரச்னையுடன் சேர்த்துக் குழப்புவதற்கு பாகிஸ்தான் முயற்சி செய்கிறதென்று திரு. சாஸ்திரி குற்றம் சாட்டினர்,

பலுசிஸ்தான் மக்களும் பக்தூனிஸ்தான் மக்களும் தங்கள் கருத்தை வெளியிட முடியாதவாறு சுயநிர்ணய உரிமையை கேலிக்கூத்தாக்கியுள்ள பாகிஸதான், மற்றவர்களுக்கு சுயநிர்ணய உரிமைபற்றி போதிப்பது வேடிக்கையானது என்று அவர் சொன்னர். காஷ்மீர் இந்தியாவுடன் இணைவது பற்றி இந்திய முஸ்லிம்களிடம் கருத்துக் கேட்டால் அதை முழுக்க முழுக்க ஆதரித்து வாக்களிப்பார்களென் பதில் தமக்கு சிறிதும் சந்தேகமில்லையெனவும் திரு. சாஸ்திரி கூறினர்.

---

## வகுப்புக்கலகங்கள் பற்றி விசாரிக்க கமிஷன் வேண்டும்

### பிரஜா சோஷலிஸ்ட் கோரிக்கை

பீகார், மே 18

இந்தியாவில் சமீபத்தில் தோன்றிய வகுப்புக்கலகங்கள்பற்றி விசாரணை செய்து அதற்கான காரணங்கள்பற்றி அறிவதுடன் இனிமேலும்இது போன்ற சம்பவங்கள் நிகழாமல் தவிர்ப்பதற்கான வழிவகைகள்பற்றி சிபார்சு செய்வதற்கு விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டுமெனக் கோரும் தீர்மானமொன்று இங்கு நரேந்திர தேவ்நகரில் நடைபெற்ற பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

கிழக்கு இந்தியாவில் நிகழ்ந்த வகுப்புக் கலக சம்பவங்கள் இந்தியாவின் நற்பெயருக்கு இழுக்கு ஏற்படுத்தியுள்ளதென்றும் மகாநாடு கவலை தெரிவித்தது.

காஷ்மீர் பற்றிய தீர்மானம் காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்து கொண்டது இறுதியானதென்றும் இந்நிலைமையை மாற்றுவது மேலும் குழப்பத்தை உண்டாக்கும் என்றும் கூறுகிறது.

---

## கம்போடியாவுக்கு சீன உதவி

பீக்கிங், மே 18

கம்போடியா தனது ஒருமைப்பாட்டைப்பாதுகாக்கவும் ஆக்கிரமிப்பிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவும் சீன உதவிபுரியுமென சீன அதிபர் லியுஷாசி மீண்டும் வலியுறுத்தியுள்ளார். சீனவுக்கான புதிய கம்போடிய தூதர் பதவியேற்ற வைபவத்தில் சீன அதிபர் இவ்வாறு கூறினர்.

---

## சிமெந்து ஆலைகள்

கராச்சி, மே 18

மேற்கு பாகிஸ்தானில் மேலும் ஐந்து சிமெந்து தொழிற்சாலைகள் நிறுவப்படுமென்று பாகிஸ்தான் கைத்தொழில் மந்திரி தெரிவித்துள்ளார்.

---

## சாவனின் அமெரிக்க விஜயம்

லண்டன், மே 18

இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் நேற்று லண்டன் வந்துசேர்ந்தார். இன்று அவர் வாஷிங்டன் செல்கிருர். வாஷிங்டனில் அமெரிக்க அரசாங்கத் தலைவர்களைச் சந்தித்து இந்திய பாதுகாப்பு உதவிசம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்துவார்.

---

## ஆயிரம் ஆண்டுக்கு முந்திய சிலை

கோலாலம்பூர், மே 18

ஆயிரம் வருடங்களுக்கு முந்தியதெனக் கருதப்படும் ஒரு சிலை நேற்று வடக்கு மலேயாவில் ஓர் இடத்தில் கண்டெடுக்கப்பட்டது பல்லவர்கோயில் ஒன்றில் இச்சிலை இருந்திருக்க வேண்டுமெனவும் நான்காம் நூற்றுண்டுக்கும் ஒன்பதாம் நூற்றுண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் மலேயாவில் பல்லவர் ஆட்சி செய்த காலத்தைச் சேர்ந்ததாக இது இருக்கலாமென்றும் கருதப்படுகிறது. சிவனை வணங்கிய ரூபத்தில் இச்சிலை உள்ளது.

---

## டில்லியில் நேபாள மன்னர்

புதுடில்லி, மே 18

மேற்கு ஜெர்மன் செல்லும் வழியில் நேபாளமன்னர் மகேந்திரர் நேற்று புதுடில்லி வந்து சேர்ந்தார். ராணி ரத்னவுடனும் வெளிவிவகார மந்திரியுடனும் புதுடில்லி வந்த மன்னர் நேற்று மாலையில் இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனைச் சந்தித்தார்.

---

## இந்து மகாசபை கோரிக்கை

புதுடில்லி, மே 18

ஷோலாபூரில் நடைபெற்ற இந்து மகாசபை மகாநாட்டில் விலைவாசி உயர்வு குறித்து கவலை தெரிவித்ததும் தங்கம் கள்ளக்கடத்தல், கள்ள மார்க்கட் வியாபாரம் ஆகியவைகளில் ஈடுபடுவோரைக் கடுமையாகத் தண்டிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அஸ்ஸாம், திரிபுரா பகுதிகளில் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து சட்டவிரோதமாக குடியேறுபவர்களால்ஏற்படும் கஷ்டங்கள் குறித்து மற்றொரு தீர்மானம் கவலை தெரிவிக்கிறது.

---

## புரட்சி நடிகரின் அறிவிப்பு

சென்னை, மே 18

"கவிஞர் கண்ணதாசன் பாடல்கள் எழுதும் படங்களில் நான் நடிக்கமாட்டேன்" என்று புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் தன்னை வைத்துப் படமெடுக்கும் படாதிபதிகளுக்கு அறிவித்துள்ளார்.

புரட்சி நடிகரின் இத் திடீர் முடிவுக்குக் காரணம் அண்மையில் சென்னையில் நடைபெற்ற நகராட்சிமன்ற தேர்தலின் போது எம். ஜி. ஆரைக் கண்ணதாசன் அளவுக்கு மீறித் திட்டியதுதான் என்று பலர் கருதுகிருர்கள்.

---

## தலையிடவேண்டாம் யுதாண்டுக்கு தென் ஆபிரிக்கா கோரிக்கை

பிரிட்டோரியா, மே 18

தென்னுபிரிக்காவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட மூன்று தேசிய தலைவர்கள் விஷயத்தில் தலையிடவேண்டாமென்று தென்னுபிரிக்கா அரசாங்கம் ஐ. நா. தலைமைக் காரியதரிசியைக் கேட்டுள்ளது. இனஒதுக்கல் கொள்கையை எதிர்த்ததற்காக அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கபபடவில்லை என்றும் சட்டபூர்வமான தென்னுபிரிக்க அரசாங்கத்தை சட்டவிரோதமான முறைகளினுல் கவிழ்க்க எத்தனிக்கும் இரகசிய ஸ்தாபனத்தைச் சேர்ந்த இம்மூவரும் கொலைக் குற்றச்சாட்டின்மீது விசாரணை செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களென்றும் உண்மை விபரம் தெரியாமல் இவர்களின் மரண தண்டனையை ரத்துச் செய்யுமாறு யுதாண்ட் கேட்டிருப்பது வருத்தமளிப்பதாகவும் தென்னுபிரிக்க அரசாங்கம் தெரிவித்துள்ளது.

---

## குவாய்த் விருப்பம்

லண்டன், மே 18

ஏடனிலிருந்தும் அரபுநாடுகளிலிருந்தும் பிரிட்டன் தனது துருப்புக்களை விலக்கிக்கொள்வதை குவாய்த் மகிழ்ச்சியுடன் வரவேற்கும் என்று குவாய்த் வெளிவிவகார மந்திரி தெரிவித்துள்ளார்.

---

## சாது வேண்டுகோள்

காசி, மே 18

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வரும அகதிகளுக்கு உதவி புரியுமாறு இந்திய சாது சமாஜத் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

## படை விலக்கல்

லியப்போல்ட்வில்லி, மே 18

கொங்கோவிலுள்ள ஐ. நா. படையின் இறுதி மூவாயிரம் துருப்புக்களும் இம் மாத இறுதிக்குள் விலக்கிக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

---

## தமிழ்நாட்டு செய்திகள்

**பெண்கள் சண்டை**

கோயம்புத்தூரில் வீதிக்குழாயில் தண்ணீர் பிடிப்பது தொடர்பாக ஏற்பட்ட வாய்ச் சண்டையில் ஆத்திரமடைந்த ஒரு பெண் மற்றொரு பெண்ணைக் கத்தியால் குத்திப் படுகாயப்படுத்தினர். இது கீரைக்காரத் தெருவில் நிகழ்ந்தது.

**நாடகப் பிரசாரம்**

விரைவில் கோயம்புத்தூர் பகுதியில் நடைபெறவிருக்கும் ஊராட்சித் தேர்தலில் ஊராட்சிகள் அனைத்தையும் கைப்பற்றிவிட ஊர்ஊராக நாடகம், வில்லுப்பாட்டு நடத்தி தீவிர பிரசாரம் செய்வதென்று காங்கிரஸ் கட்சி திட்டமிட்டுள்ளது.

**ஜூன் 7 ல் சட்டஎரிப்பு**

ஜூன் 7-ந் திகதி கோயம்புத்தூர் தந்தி அலுவலகத்தின் முன் இரா. நெடுஞ்செழியன் இந்தித் திணிப்பை எதிர்த்து மறியல் செய்வார். திருமதி இராசம்மாள், எஸ். ஏ. இராசமாணிக்கம் ஆகியோர் சட்டப் பிரதியை எரிப்பர்.

**யாருக்கு ஆதரவு?**

சீனவை ஆதரிக்கிருரா? ரஷ்யாவை ஆதரிக்கிருரா என்பதை திரு. ராமமூர்த்தி பகிரங்கமாக அறிவிக்கவேண்டுமென்று திரு. மணலிகந்தசாமி மன்னர் குடியில் நடந்த பொதுக்கூட்டத்தில் கூறினர்.

---

அல்ஜியர்ஸ், மே 18

சோவியத்யூனியன், பல்கேரியா, ஐக்கிய அரபுக்குடியரசு ஆகிய நாடுகளில் 22 நாட்கள் சுற்றுப்பிரயாணம்செய்துவிட்டு நேற்று அல்ஜியர்ஸ் வந்துசேர்ந்த அல்ஜீரியப் பிரதமர் பென்பெல்லாவை அல்ஜீரிய மக்கள் உற்சாகத்துடன் வரவேற்றனர். தமது வெளிநாட்டு விஜயம் அல்ஜீரியாவின் பொருளாதாரத்தில் முக்கிய திருப்பத்தை உண்டுபண்ணுமெனக் கூறினர்.

---

## பஸ் விபத்தில் 12 பேர் மரணம்

ஹைதராபாத், மே 18

ஆந்திர பிரதேசத்தில் ஸ்ரீகாகுளம் என்னுமிடத்திலிருந்து 20 மைல் தூரத்திலுள்ள ஒரு இடத்தில் நேற்று நிகழ்ந்த ஒரு பஸ் விபத்தில் 12 பேர் மாண்டனர். ஒரு மரத்துடன் மோதியதால் இவ்விபத்து நேர்ந்தது. ஆறுபேர் ஸ்தலத்திலேயே மாண்டனர். மற்றும் ஆறுபேர் ஆஸ்பத்திரியில் மாண்டனர். 30 பேர் காயமடைந்தனர்.



# மாணவர் மலர்



## அமெரிக்காவின் 35 ஜனாதிபதிகள்

3-வது ஜனாதிபதி: Thomas Jefferson. 1743-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் திகதி பிறந்தார். இவருடைய தந்தை பெயர்: பீட்டர் ஜெவவர்ஸன். தோமஸின் தந்தையார் 1757-ம் ஆண்டு காலமானார். இவர் தமது 20-வது வயதில் பட்டப் பயிற்சி பெற்றார். பல மொழிகளையும் விரும்பிக் கற்ற இவர், வயலின் வாசிப்பதிலும் குதிரை சவாரி செய்வதிலும் போதிய தேர்ச்சி பெற்றிருந்தார். 1772-ம் ஆண்டு மார்தா வேலெஸ் என்பவரைத் திருமணம் செய்தார். 1796-ம் ஆண்டில் உதவி ஜனாதிபதியாகவிருந்து 1800-ம் ஆண்டில் ஜனாதிபதியானார். தமது பதவிககாலத்தில் பல கல்லூரிகளையும், பல்கலைக்கழகங்களையும் நிறுவியது மட்டுமன்றி பல்வேறு பதவிகளையும் வகித்துள்ளார். 1826-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ம் திகதி காலமானார்.

4-வது ஜனாதிபதி: James madison. கிங் ஜோர்ஜில் 1751-ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் திகதி பிறந்தார். மக்கள் சபைக்கு 1789-ம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்டார். 1808-ம் ஆண்டு ஜனாதிபதியானார். நாட்டின் முன்னேற்றத்துக்காக தமது பதவிக்காலத்தில் ஏராளமான பணம் ஒதுக்கினார்.

இவருடைய காலத்தில்தான் வீதிகள், கால்வாய்கள், திருத்தியமைக்கப்பட்டதுடன் கைத்தொழில்களும் முன்னேற்றமடைந்தன. 1794-ம் ஆண்டு டொரத்திபேனி என்ற விதவையை திருமணம் செய்தார். 1817-ம் ஆண்டு மடிஸன் தமது பதவிகளிலிருந்து ஓய்வு எடுத்துக்கொண்டார். 1636-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ந் திகதி காலமானார்.

5-வது ஜனாதிபதி: Jams Monroe 1758-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ந் திகதி வெஸ்ட்மோர்லேண்டில் பிறந்தார். தந்தை பெயர்: ஸ்பென்ஸ் மொன்றோ. தாய் பெயர்: எலிஸா ஜோன்ஸ். சட்டத்துறையில் நல்ல தேர்ச்சி பெற்ற ஜேம்ஸ், 1790-ம் ஆண்டில் அமெரிக்க செனட்டரானார். 1794-96-வரை பிரான்ஸுக்கா மந்திரியாகவிருந்தார். இந்தக் காலத்தில் தான் பிரான்ஸ், ஸ்பெயின், அல்ஜீரியா நாடுகளுடனான உறவுகள் வலுப்பெற்றன. 1894-ம் ஆண்டு மட்றிட்டுக்கும் 1805-ல் லண்டனுக்கும் சில தகராற்றுக்களைத் தீர்த்து வைக்கும் பொருட்டு இவர் அனுப்பி வைக்கப்பட்டார். 1816-ல் ஜனாதிபதியானார். 1801-ல் ஆபிரிக்காவில் நீக்ரோ அடிமைகளை குடியமர்த்த முடிவு செய்தார். 1786-ல் எலிஸபெத் கோர்ட்றைட் என்பவரை திருமணம் செய்த இவர், 1831-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ம் திகதி காலமானார்.

6-வது ஜனாதிபதி: John Quincy Adams. 1767-ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ம் திகதி பிறந்தார். தந்தை பெயர்: ஜோன். தாய் பெயர்: அபிகெயில் அடம்ஸ். 1787-ம் ஆண்டில் பட்டம்பெற்ற இவர் பாரிஸ், வெயிடன், ஹாவாட் ஆகிய இடங்களில் கல்வி பயின்றார். நெதர்லாந்து, பெர்லின், செண். பீட்டர் ஸ்பேர்க், லண்டன் ஆகிய இடங்களில் அமெரிக்க மந்திரியாகவிருந்து 1814-ம் ஆண்டில் சமாதான ஒப்பந்தத்தை தயார் செய்ய பாடுபட்டார். 1824-ம் ஆண்டில் ஜனாதிபதியான இவர் 1828-ம் ஆண்டு ஜாக்ஸன் என்பவரால் தோற்கடிக்கப்பட்டார். 1797-ம் ஆண்டில் இவருக்கு திருமணம்நடைபெற்றது. மனைவியின் பெயர்: லூயிஸா கதரின் ஜோன்ஸன். ஜோன் அடம்ஸ், அடிமைகளுக்காகப் பாடுபட்டார். அதனுடன் மட்டுமன்றி மெக்ஸிக்கோ யுத்தத்திலும் இவர் கலந்து கொண்டார். 1818-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23-ம் திகதி சபாநாயகர் அறையில் காலமானார்.

(தொடரும்)

## மூளைக்கு வேலை

நான் கேட்ட கேள்வியின் விடை என்னவென்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். என்ன அப்படித்தானே? ஆமாம் சரியான விடை: அருணப்பன். பின்வருவோர் சரியான விடையை அனுப்பியுள்ளனர். அவர்களுக்கு எனது பாராட்டுதல்கள.

சி. ரவீந்திரசர்மா, பூநகரி; சி. யோகேஸ்வரி, மகளிர் உயர்தர பாடசாலை பண்டத்தரிப்பு; கா. சதானந்தசர்மா, சுன்னாகம்; எஸ். ஜீவமதி, மயிலிட்டி; ஜி. ஆர். அமிர்தநாயகம், நெடுந்தீவு; க. சொர்ணம்பிகை, காரைநகர்; பூவதி, உடுவில்; வி. சண்முகலிங்கம், யாழ்ப்பாணம்; ஐ. முருகையா, சூராவத்தை; செ. இ. அபெனடிற், இளவாலை; ஆர். சிவயோகம், சில்லாலை; கே. மனோகரன், சாவகச்சேரி; எஸ். பொன்னம்பலம், வேலணை; ஆர். மனோஹரி, மிருசுவில்.

— சாந்தா

விஞ்ஞானப் புதுமைகள்

## எக்ஸ்ரே எவ்வாறு படம் பிடிக்கிறது?

— த. இந்திரலிங்கம் —

சாதாரணமாக ஒளி ஊடுருவிப் பாயமுடியாத பொருள்களுக்கு அப்பாலுள்ளவற்றையும் காண்பதற்குத் துணையாக அமைவது எக்ஸ் கதிர் (X-RAY) என்பது யாவரும் அறிந்ததே. அகிலத்திற்கு அரும்பெரும் கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடித்துக் கொடுத்தது அமெரிக்க நாடு. அதே அமெரிக்க ஐக்கியநாடுகளிலுள்ள ஐந்து மருத்துவர்கள் அருமையான ஒரு கண்டுபிடிப்பைச் சில ஆண்டுகளுக்கு முன்னர் சாதித்திருக்கிறார்கள். எக்ஸ்-கதிர் சலனப் படக் கருவியைத் தான் அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தக் கருவியில் மற்றொரு சிறப்பும் இருக்கிறது. இக் கருவியினால், திரையில் காட்டக்கூடிய சலனப்படமாகவே பிடிக்கமுடியும். இந்த எக்ஸ்-கதிர் அசைவுப் படக் கருவியினால் உடலுக்குள் அமைந்துள்ள உறுப்புகளையும் அவை வேலை செய்யும் முறையையும் அப்படியே தத்ரூபமாகப் பிடித்துவிடலாம். இந்தக் கருவி, மருத்துவத் துறையின் ஆராய்ச்சி, பயிற்சி முதலியவற்றுக்குத் துணைபுரியும் என்ற செய்தி விஞ்ஞானிகளுக்கு மிகவும் ஊக்கமளிக்கிறது. இக் கருவியை சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர், சான்-பிரான்சிஸ்கோ நகரில் நடந்த கதிரியல்துறைக் கழகத்தின் 34-வது ஆண்டுவிழாவின் போது காட்டினார்கள். அப்போது சில திரைப்படங்களும் காட்டப்பட்டன. இரத்தாசியத்தின் துடிப்பும், மணிக்கட்டு, தோல், முழங்கால்பட்டை, இடும்பெலும்பு ஆகியவற்றின் அசைவுகளும் இவ்வித படங்கள் வாயிலாகக் காட்டப்பட்டன. இந்தப் பரிசோதனைக்கென்றே ஒருவகை நீர்ப்பொருள் தயார் செய்யப்பட்டது. அது வயிற்றினுட் செல்லும்போது தசைநார்கள் எப்படி அசைகின்றன என்பது தெளிவாகத் தெரிந்தது.

(5-ம் பக்கம் பார்க்க)

'ஈழநாடு' வாசகர்களுக்கு

ஒரு நற்செய்தி

7-6 64 ஞாயிறு

இதழுடன்

'அறிவொளி'

என்னும் சிறந்த

விஞ்ஞான மலர்

வெளியாகிறது.

உங்களில் அநேகம், தங்கியுள்ளது — சிறந்ததை தெரிவு செய்க, நெஸ்பிரேயை தெரிவு செய்க!

ஏன்? 8 மாதமாகியதும் வாழ்க்கையைக் கரிசனையோடு கவனிப்பர். அப்போதுதான் நீங்களும் குழந்தையின் உணவைப் பற்றி புதிதாகக் கூர்ந்து கவனிக்க வேண்டும். பால், எவருக்கும் சமனான நல்லுணவின் ஒரு அங்கமாகும்—இன்னும் விசேஷமாக வளரும் பிள்ளைகளுக்கு.

விசேஷ குழந்தை உணவுகளை ஊட்டி, வளர்த்தபின் தொடர்ந்து சுத்தமான, செழிப்பான, நம்பிக்கையான பாலுணவையே கொடுத்தல் வேண்டும்.

அவ்வுணவே நெஸ்பிரே—முழு ஆடை நிரம்பிய பால் மா—நெஸ்லே ஸ்தாபன வாக்குரிமை பெற்ற நம்பிக்கையான பால் இதுவே.




நெஸ்பிரே — சுத்தமான பசுபாலில் தயாரிக்கப்பட்டது!!!

## வலி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் கல்லுண்டாய்

### உப்பள அபிவிருத்தித் திட்டம்

### தேவை

**1000 கியூப் 9—12 கண்டகல் தேவை**

கல்லுண்டாய் உப்பளத் திட்டத்தின் உபயோகத்திற்கு 1000 கியூப் 9—12 கண்டகல் தேவை. இத்தொகை 1-6-64ல் இருந்து 31-7-64 க்கு முன்னதாக கல்லுண்டாயில் குறித்த இடத்தில் கியூப் கட்டிக் கொடுக்கவேண்டும்.

10 கியூப ஈவு இன்றி இறக்கமாக முறைப்படி கட்டப்பட்டுதார் இடப்பட்டு, உப்பளமுகாமையாளரிடம் பொறுப்புக் கொடுத்ததும் பெறுமதியின் 75% உடன் கொடுக்கப்படும். ஒப்பந்தப்படி செய்ய விரும்புவோர் ஒப்பந்தம் செய்யும் பொழுது ரூபா 100-00 சமாசத்தில் (டிப்போசிற்) வைப்புப் பணம் செலுத்தவேண்டும். ஒப்பந்த மூலம் செய்யவிரும்புவோர் வலிமேற்கு ப. நோ. கூ. ச. சமாசத் தலைவருக்கு 31-5-64 க்கு முன்னதாக விண்ணப்பிக்கவேண்டும்,

இப்படிக்கு,
வி. கந்தசாமி,
சமாச நிருவாகச் செயலாளர்.
16-5-64
சங்கானை. 367

## எக்ஸ்ரே எவ்வாறு..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ரோஸ்செஸ்டர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கதிர் இயல்துறை விற்பன்னர்களான டாக்டர்கள் ஜார்ஜ் எச். ராம்சே, ஜேம்ஸ் எஸ். வாட்சன், ஜான் ஜே. தாம்ஸன், ஃபிராங்ட்ரீ சிங்கர், சிட்னி வின்பர்க் ஆகியோரே இதைக் கண்டுபிடித்தனர்.

இந்தக் கருவியைப் பயன்படுத்துவதால் ஓர் ஆபத்துக் இருக்கிறது. எக்ஸ்-கதிரை நெடு நேரம் அளவுக்கு மீறி உடலில் செலுத்தினல் விரியக் குறைவு முதலியன ஏற்பட்டுத் துன்பம் விளையும். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இக் கருவி, தொழிற்படும்போது மட்டுமே வேண்டிய இடத்தில் எக்ஸ்-கதிரைச் செலுத்தும். உடலின் எந்தப பாகத்தை ஆராய்கிறர்களோ இவ்விடத்தில் மட்டுமே; படம் பிடிக்கிற கணநேரத்தில் மட்டுமே படும். அதாவது படம் பிடிக்காத எந்த நேரத்திலும் கதிரியக்கம் நோயாளர்களை தாக்காது. இத்தகைய முறைகளினல் ஆபத்து நேராமற் தடுக்கிறர்கள்.

**படம் பிடிக்கும் விதம்**

நோயாளியை ஒரு திரைக்கு முன்னர் நிறுத்தவேண்டும். இத் திரையிற் பல இரசாயனப் பொருள்கள் பூசப்பட்டிருக்கும். எக்ஸ்-கதிர் அதன் மீது படும்போது அத்திரை நன்கு ஒளிரும். திரை ஒளிர்வதனல்தான் எக்ஸ்-கதிர் இயங்குவதை அறியலாம். வெறும் கண்களாற் பார்க்க முடியாது. கண்ணுக்குத் தெரியாததை எப்படிப் படம் பிடிக்க முடியும்? அதற்காகவே ஒளிர்திரை தேவைப்படுகிறது. ஒளிர் திரைக்குப் பின்புறத்தில் படப்பிடிப்புக்கருவி ஒன்றைச் சரிசெய்து வைக்கவேண்டும். அதிற் பொருத்தப்பட்டுள்ள புகைப்படக் கண்ணுடி மிக ஆற்றல் வாய்ந்ததாயிருக்கும். படம்பிடிக்கும் கருவியும், கதிர் செலுத்தும் குழாயும் ஒரே நேரத்தில் இயங்குகின்றன. இந்த ஒன்றிய சிக்கலான இயக்கத்தை உண்டாக்குவதற்கு, மிகவும் நுண்ணிய மின்சாரப் பொறியமைப்பு ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறர்கள். இந்த அமைப்பினைக் கொண்டு, முன்னர் கூறியபடி படம்பிடிக்கும் அந்தக் கணத்தில் மட்டுமே எக்ஸ்-கதிர் நோயாளியின் உடலிற் படும்படி செய்கிறர்கள். ஒரு செக்கண்டில் 60 படங்கள் எடுக்கலாம்.

## The Manipay Town Council

### Sale of Properties for non-payment of Assessment rates for 1950 to 1962

NOTICE is hereby given that the movable property found in the house and in the absence of movable property liable for seizure, (1) rents and profits. (2) timber or produce. (3) materials of the house and (4) the undermentioned properties themselves seized in virtue of a warrant issued by the chairman, Town Council, Manipay, in terms of section 252 of the Municipal Councils ordinance, No.29 of 1947, as read with section 169 (1) of the Town Councils ordinance, No 3 of 1946, for arrears of rates due on the premises for the years 1950 to 1962 in the sub-joined schedule will be sold by public auction on the spot and the time mentioned therein unless in the meantime the assessment rates and costs be duly paid.

S. Muthucumarasamy,
Chairman.

Office of the Town Council,
Manipay,
15-5-64.

Schedule

The time of sale to commence on the first mentioned premises at 9 a. m on each day.

Ward No. 1.
Monday the 22nd June1964
Lot Nos- Punnalai Road-63/ 16/ 171

Ward No 2.
Lot Nos - Punnalai Road-122 Uchchiodai lane-54. Narivaikkal lane-10/13.

Ward No. 3.
Tuesday the 23rd June 1964.
Lot Nos:- Thannai lane - 36/8. Velapodai lane -20.

Ward No 4.
Lot Nos:- Kayampuli lane - 8/8/1/10/12

Ward No 5.
Thursday the 25th June 1964 Lot Nos:- Lawton Road - 58/4.
Mudaliyar Kanagasabai Road - 9 11/3, 11/8, 11/9, 11/10, 11/11, 13, 15.

## ORDER NISI

In the District Court of Jaffna.

In the matter of the Last will and Testament of the late Nallathamby Kathirvelu of Chulipuram

Deceased.

Case No. T/1411.

Pakkiam widow of Nallathamby Kathiravelu of Chulipuram.

Petitioner.

This matter coming on for disposal before N. Sivagnanasundaram Esqr, District Judge, Jaffna on the 10th day of February 1964 in the prrsence of Mr. T. Sangarapillai, Proctor on the part of the petitioner and the affidavit and petition of the petitioner and affidavit of one of the witnesses to the Last Will having been read.

It is ordered that petitioner be declared entitled to have Probate of the Last Will and Testament of the deceased as sole legatee and as executor in terms of the Last Will dated 26th August 1937 and attested by R Candiah N. P. under No 9447 and the said will be declared proved and Probate thereof be issued to the petitioner accordingly, unless any person or persons interested shall on or before the 24th day of April 1964 appear before this Court and show cause to the statisfaction of this Court to the contrary.

Jaffna, this 10th day of February 1964.

Sgd N. Sivagnasundram.
District Judge Jaffna.
15-5-64.

Drawn by,
Sgd T. Sangarapillai.
Proctor for Petitioner.
24-4-64.

Time to show cause extended to 5th June 1964.

Sgd. N. Sivagnanasundram.
District Judge.
15-5-64.
369

## உடனே தேவை

மனேஜர்: சம்பளம் ரூபா 125/- பிணை: காசு-ரூபா ஆயிரம். ஆதனம் - ரூபா ஐயாயிரம். கூட்டுறவுப் பயிற்சிப் பத்திரம் உள்ளோர் 28-5-64 க்குள் எனக்கு மனு பதிவுத் தபாலில் அனுப்பவும்.

தலைவர்,
கட்டைவேலி, பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம்,
கரவெட்டி.

18-5-64. 372

## ORDER NISI

In the District Court of Jaffna.

In the matter of the intestate estate of the late Theogu-Elias of Chulipuram.

Deceased.

Viyagula Mary widow of Theogu Elias of Chulipuram.

Petitioner.

No. T/1418 vs.

1. Thaveethu Anthonimuththu and
2. wife Loorthamma both of Chulipuram.
3. Elias Packianathan of Chulipuram.
4. Thaveethu Thiruchelvam and
5. wife Sinnamalar both of Chulipuram

Minors:
6. Elias Arulnathan of do of the age of 19 years.
7. Elias Jeganathan of do of the age of 16 years.

minors appearing by their Guardian - ad - litem the 3rd Respondent.

Respondents.

This matter coming for disposal before T. Muttusamipillai, District Judge, Jaffna on the 23rd day of December 1963 in the presence of Mr T Sangarapillai, Proctor on the part of the Petitioner and the affidavit of the petitioner dated 8th October 1963 having been read.

It is ordered that the 3rd Respondent abovenamed be appointed Guardian–ad–litem over the 6th and 7th minor Respondents abovenamed for the purpose of these proceedings.

It is further ordered that the petitioner abovenamed be declared entitled as the widow of the deceased abovenamed to have Letters of Administration to the estate af the said deceased issued to her accordingly unless the Respondents abovenamed or any other person or persons interested shall on or before the 13th day of March 1964 and show sufficient cause to the satisfaction of the Court to the contrary.

Jaffna this 23rd day of December 1963.

Sgd. N. Sivagnanasundaram.
District Judge, Jaffna.

Drawn by,
Sgd. T. Sangarapillai.
Proctor for Petitioner.
13-3-64

Time to show canse extended to 29th May 1964.
(Sgd.) N. Sivagnanasundaram,
District Judge, Jaffna.
370

## தேவை

வலிமேற்கு பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆரம்பித்திருக்கும் கல்லுண்டாய் உப்பள அபிவிருத்தித் திட்டத்தில் வேலை செய்வதற்குக் கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு தகுதியுடையோர் விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்கள் 25-5-64 திங்கட்கிழமை மாலை 2 மணிக்கு முன்னதாக சமாசத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் வேலையைக் குறிப்பிடவும். நேர்முகப் பரீட்சையில் தேர்ச்சி பெறுவோர், ஆறு மாத காலம் தற்காலிகமாக நியமிக்கப்படுவர்.

1. பண்டகசாலைப் பொறுப்பாளராகவும், கணக்காளராகவும் கடமையாற்ற ஒருவர் தேவை.

தகுதி:- (அ) ஆங்கிலத்தில் எஸ். எஸ். ஸி. சித்தியெய்தியிருத்தல். (ஆ) ஆங்கிலத் தட்டெழுத்து அனுபவம். (இ) கணக்கு வைக்கும் அனுபவம், வயது:- 22-க்கு மேல் 40-க்கு உள். பிணைப்பணம்:- காசு ரூபா 2500-00. வேதனம்:- மாதம் 250 ரூபா மட்டும்.

2. கடல் நீர் இறைக்கும் இயந்திரத்தை இயக்குபவர் ஒருவர் தேவை,

தகுதி:- (அ) குறைந்தது ஜே. எஸ். ஸி. சித்தியெய்தியிருத்தல். (ஆ) பம்பு வேலை அனுபவம் உடையவர்,

வயது:- 22—40. பிணைப் பணம்!- காசு ரூபா 1000-00. வேதனம்:- மாதம் 150-00ரூபா மட்டும்.

3. உப்பளக் காவலாளர் மூவர் தேவை.

தகுதி:- குறைந்தது ஜே. எஸ். ஸி. வயது:- 20—40. பிணைப்பணம்:- காசு ரூபா 500-00. வேதனம்:- மாதம் 135-00 ரூபா மட்டும்.

4. பியோன் ஒருவர்தேவை.

தகுதி:- குறைந்தது ஜே. எஸ். ஸி. வயது:- 20—40. பிணைபபணம்:- காசு ரூபா 500-00. வேதனம்:- மாதம் ரூபா 135-00 மட்டும்.

5. தேவைக்கேற்ப உப்பளத்தில் வேலைசெய்வதற்குக் கூலியாட்கள் முறைப்படி எடுக்கப்படும். விரும்புவோர் விண்ணப்பிக்கவும்.

வேலை நேரம்:- காலை 6-30ல் இருந்து 10-30 வரை. மு. ப. 11-இல் இருந்து பி. ப. 1-00 மணி வரை.

நாட்கூலி:- ரூபா 4-50 சதம் மட்டும்.

இப்படிக்கு,
வி. கந்தசாமி,
(சமாச நிருவாகச்செயலாளன்)
16-6-64
சங்கானை. 366

## தேர்வுப்பகுதிகள்

முதலாவது பகுதி திருக்குறளும் பரிமேலழகர் உரையும் பிற உரைகளும். இரண்டாவதுபகுதி திருக்குறள் ஆராய்ச்சி. இதில் ஆறு பிரிவுகள் உள. மூன்ருவதுபகுதி திருக்குறள் ஆய்வுரை. விண்ணப்பங்கள் டிசெம்பர் திங்களுக்கு முன் அனுப்பப்படல்வேண்டும்.



வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

VAUXHALL WYVERN வக்ஸ்சோல் வைவேண் EL ஸீரீஸ். பார்வையிடும் இடம் செல்வம்ஸ் கராச் கோண்டாவில் உபதபாற் கந்தோருக்கு அருகாமையில். விலை ரூபா 6500/- 421

## தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50

வைத்தியர் பரிபூரணானந்தா கைலாயபிள்ளையார் கோவடி யாழ்ப்பாணம்,

## கபிரியேல் தயாரிப்புகள்

1. **கபிரியேல் பெயின் ஒயில்**
சகல நோவு, வீக்கம்,வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. **கபிரியேல் ஒயின்மென்ற்**
சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. **கபிரியேல் ஸ்பெஷல் பாம்**
தடிமன், தலையிடி, சந்துளி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்:
GABRIELS,Chunnakam. 278



## யாழ்ப்பாண மாநகரசபை

### ஏல விற்பனையாளர்கள்—தரகர்கள் உத்தரவுச்சீட்டு - 1964

இதன்கீழ்குறிப்பிடப்பட்டுள்ளோர்,யாழ்ப்பாணமாநகரசபை எல்லைக்குள் 1964-ம் ஆண்டு முடியும்வரை ஏலவிற்பனையாளர்கள்—தரகர்களாகக் கடமையாற்றுவதற்கு உத்தரவுச் சீட்டுப் பெற்றுள்ளார்கள் என்பதை பொதுமக்கள் கவனத்திற்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| | பெயர் | முகவரி | உத்தரவுச்சீட்டின் தன்மை |
|---|---|---|---|
| 1 | திரு. எஸ். எஸ். முத்துக்குமாரு, | 92, பலாலிவீதி யாழ்ப்பாணம். | ஏலவிற்பனையாளர் |
| 2 | திரு. ரி. செல்லையா, | 37,கொழும்புத்துறை, வீதி,யாழ்ப்பாணம். | ஏலவிற்பனையாளர் |
| 3 | திரு. வி. ஏரம்பமூர்த்தி, | காரைநகர் | ஏலவிற்பனையாளர் |
| 4 | திரு. வி. கோபாலபிள்ளை, | 22, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் | ஏலவிற்பனையாளர் |
| 5 | திரு. ஆர். கனகரத்தினம், | 35, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். | ஏலவிற்பனையாளர் |
| 6 | திரு. ஈ. ஆர். யோசேப், | நக்காவீதி, சுண்டிக்குளி | ஏலவிற்பனையாளர்-தரகர் |
| 7 | திரு; கே. பொன்னுத்துரை, | 28/1, யாழ்.வீதி, யாழ்ப்பாணம். | ஏலவிற்பனையாளர்-தரகர் |
| 8 | திரு. வி. எஸ். குட்டிப்பிள்ளை, | 643, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். | ஏலவிற்பனையாளர் |
| 9 | திரு. என். அந்தோனிப்பிள்ளை, | 261, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். | ஏலவிற்பனையாளர் |
| 10 | திரு.என். ஆறுமுகம், | சித்தன்கேணி. | ஏலவிற்பனையாளர் |
| 11 | திரு. எஸ். இரத்தினசபாபதி, | 24, 4-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். | ஏலவிற்பனையாளர் தரகர் |

மாநகரசபை அலவலகம்,
யாழ்ப்பாணம்,
15-5-64.

டி. டி. ஜயசிங்ஹ,
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை.
371

# சிறிமாவிடம் என். எம் தோற்று விட்டாராம்!

யாழ்ப்பாணம், திங்கள்

"ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக்கும், இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கும் அதிகாரத்தைக் கைபற்றுவதற்காக நடந்த ஜீவமரணப் போராட்டத்தில் ஏறத்தாள மூன்று வருஷ அரசியல் அநுபவமுள்ள ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா முப்பதுவருஷ அரசியல் அனுபவமுடைய என்.எம். பெரேராவைத் தோற்கடித்துவிட்டார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிர்வாகக் குழுவில் ஸ்ரீமாவுக்கு பலமான ஆதரவிருக்கிறது. ஆனால் லங்கா சமசமாஜ கட்சியின் நிர்வாகக் குழுவில் என். எம். கொண்டுவந்த பிரேரணையோ தோல்வியடைந்துவிட்டது." என்று யாழ். பிரதேச கம்யூனிஸ்ட் கட்சி வாலிபமுன்னணியின் உரும்பிராய்க் கிளையில் நிகழ்ந்த கூட்டமொன்றில் திரு. வி. ஏ. கந்தசாமி பேசுகையிற் குறிப்பிட்டார்.

திரு. எஸ். பி. நடராசா கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். திரு. கந்தசாமி மேலும் குறிப்பிட்டதாவது:

இடதுசாரித் தலைவர்கள் தோதல்மூலம் இடதுசாரிகள் பதவிக்கு வரலாம் என்று இதுவரை சொல்லிவந்தார்கள். இப்போதோ பதவிக்கு வருவதற்கு குறுக்குப் பாதையைக் கண்டுபிடித்துவிட்டார்கள். முதலாளித்துவ மனப்பான்மையுள்ள அரசாங்கத்தில் மந்திரிப்பதவி வகிப்பதே அவர்கள் கண்ட வழி. ஆனால் தொழிலாளவர்க்கம் பதவிக்கு வந்திருக்கும் ஒருடசினுக்கு மேற்பட்ட நாடுகளில் பாராளுமன்ற மூலம் அவர்கள் பதவியைக் கைப்பற்றவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. அனுபவம்மிக்க நமது இடதுசாரித் தலைவர்களிற் பலர் ஞாபகசக்தி குறைந்தவர்களாக மாறிவிட்டது விசனத்துக்குரியது.

சமீபத்தில் 21 அம்சக் கோரிக்கையைப் பெறுவதற்காக தொழிலாளர் நிகழ்த்தியவை போன்ற போராட்டங்கள் அரசியல்துறையிலும், பொருளாதாரத் துறையிலும் அவர்களுக்கு நிச்சயம் வெற்றியைப் பெற்றுத்தரும் என்றும் திரு கந்தசாமி கூறினர்.

## ஓரே ஸ்தாபனத்தின் கீழ் ஆசிரியர்களை சேர்க்கமுயற்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

"வடபகுதி ஆசிரியர்கள் ஸ்ரீலங்கா ஜாதிககுரு சங்கமயவின் முக்கியத்துவத்தைஉணர ஆரம்பித்துவிட்டதை அறிய மகிழ்கிறேம். நமது சங்கம் 5 அம்சக் கோரிக்கை ஒன்றின் அடிப்படையில் இன மத வேறுபாடின்றி ஆசிரியரின் நலத்திற்காகப் போராடி வருகின்றது. நேற்றையதினம் தமிழ் ஆசிரியர்கள் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம் எங்கள் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது."

இவ்வாறு ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்கமயச் செயலாளர் ஆரியவன்சா வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஸ்ரீலங்கா ஜாதிககுருசங்கமயவுடன் தமது ஸ்தாபனத்தை இணைப்பது பற்றி ஆராய கூடியிருந்த வட பிரதேச ஆசிரியர் செயற்குழுவிற் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா குருசங்கமயத் தலைவர் பீட்டர் சில்வா உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:

ஆசிரியர்கள் பல பாகங்களில் பிரிந்து தமது சக்தியை வீணக்காமல் ஒரே ஸ்தாபனமாக இணைந்து செயலாற்றுவது நன்று. ஆசிரியர் பிரிந்து தத்தமக்குள்வேற்றுமை கற்பித்துப் போராடுவதற்கு அரசியல்வாதிகளே காரணம். அரசியல்வாதிகளின் வலையில் விழாமல் நாட்டை முன்னேற்ற எம்முடன் ஒத்துழைக்க வேண்டும்.

நமது பிள்ளைகளுக்குப்பாடம் போதிக்கையில் சிங்கள மக்களும் தமிழ்மக்களும் சகோதரர்கள் என்றும் அவர்கள் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்றும் ஆசிரியர்களாகிய நாம் வற்புறுத்தி வருகிறேம். தமிழாசிரியர்களும் அவ்வாறு தமது மாணவருக்கு வற்புறுத்தி வந்தால் அரசியல்வாதிகளின் விஷமத்தனத்தால் இன்று எமது மத்தியிற் கசப்பு உணர்ச்சியும் பிளவும் இருந்தாலும் எதிர்காலத்தில் அத்தகைய நிலைமை நிலவவிடாது தடுக்கவர்களாவோம்.

இம்மாதம் 23-ந் திகதிகூடும் மகாநாட்டில் இந்த நாட்டின் ஆசிரியர்க்கான ஒரே பிரதிநித்துவமுள்ள ஸ்தாபனம் ஒன்றை உருவாக்குவதுபற்றி இறுதி முடிவுகள் செய்யப்படும் எனக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## கிணற்றில் வீழுந்து குழந்தை மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

சலவெட்டித் திடல் கண்ணகை அம்மன் கோவிலுக்கு ஐந்து பிள்ளைகளுடன் வழிபாடுசெய்யச் சென்ற தாய் தந்தையர் கிணற்றடியில் கைகால்களைச் சுத்தஞ்செய்து கொண்டு கோவிலுக்குள் போனவிடத்திலேயே தமது இளைய மகள் மகேஸ்வரி தவிர மற்றவர்களிருப்பதைக் கவனித்தபின் அங்கு போய் கிணற்றினுள் பார்த்தபொழுது நீரில் குமிழிகள் எழும்புதலைக் கண்டு கிணற்றில் இறங்கிப் பிள்ளையை வெளியே எடுத்தனராம். ஆனால் பிள்ளையின் உயிரைப் பாதுகாக்க முடியவில்லை.

திரு. பொன்னையாவின் மகளும் கலவெட்டித்திடல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவியுமான மகேஸ்வரியின் சடுதிமரணம் பற்றி மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம் விசாரணை நடத்தியபோது இவ் விபரங்கள் வெளியாகின.

இறந்த பிள்ளையின் தாய் திருமதி சிவக்கொழுந்து, தந்தை திரு. பொன்னையா, கலவெட்டித்திடல் கிராமசேவையாளர் திரு. எஸ். எஸ். சின்னத்தம்பி, திரு. சண்முகம் ஆகியோர் சாட்சியமளித்தபின் கிணற்றில் விழ்ந்து மூழ்கிய விபத்தினல் மரணம் சம்பவித்ததெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## அங்கத்தவர் ராஜினமா

ஊர்காவற்றுறை, ஞாயிறு

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட அல்லைப்பிட்டி-மண்டைதீவு கிராமசபையின் இரண்டாம் வட்டார அங்கத்தவரான திரு. செல்லப்பா ஞானசுந்தரம் தமது அங்கத்தவர் பதவியை ராஜினமாச் செய்துவிட்டாரென அறியப்படுகிறது.

## கொடிகாமத்தில்திருடர் கைவரிசை!

கொடிகாமம், சனி

கடந்தசிலதினங்களாக கொடிகாமத்தில் திருடர்கள் தங்கள் கைவரிசையை காட்டிவருகிறார்கள். நேற்றிரவு நான்குவீடுகளில் புகுந்த திருடர்கள் ஒரு வீட்டில் நகைகளையும்,மற்றொரு வீட்டில் துணிகளையும் திருடிச் சென்றுள்ளார்கள்.

கச்சாயில் நேற்றிரவு அரசாசாங்கஉத்தியோகத்தரொருவரின்வீட்டில் திருடர்கள்புகுந்து பணம் வைத்திருந்தபெட்டியை எடுத்துச்சென்று நடுவீதியில் வைத்துபெட்டியை உடைத்தார்களென்றும், தூரத்தில் ஜனநடமாட்டத்தைக்கண்டதும் பெட்டியை விட்டுவிட்டு, அதிலுள்ள 40 ரூபாயை மட்டும் எடுத்துச் சென்றுர்களென்றும் அறியப்படுகிறது.

## ரூ. 70 லட்சம் செலவில் தபால் பிரித்தெடுக்கும் நிலயம்

கொழும்பு, ஞாயிறு

ரூ. 70 லட்சம் செலவில் தபால் பிரித்தெடுக்கும் நிலையமொன்று கொழும்பில் கட்டப்படவிருக்கிறது.

கோட்டைபுகையிரத நிலயத்திற்கும் கொழும்புத் துறைமுகத்திற்கும் சமீபமாகக் கட்டப்படவிருக்கும் நிலயம் கடிதங்களைத் தாமதமின்றி அனுப்புவதற்கு வழிசெய்யுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இருவருடங்களில் பூர்த்தியாக்கப்படவிருக்கும் இந்த நிலயம் நவீன வசதிகளைக் கொண்டிருக்கும்.

## தமிழ்மறைக் . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சிதம்பரம் தலைமையில் 25-5-64 திங்கட்கிழமை 6 மணி தொடக்கம் மாநாடு நடைபெறும். மாணவர்களின் பேச்சுப் போட்டியும் பாட்டுப்போட்டியும் இவற்றையடுத்துப் பரிசில் வழங்கலும் நிகழும்.

இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. ச. தனஞ்செயராசசிங்கம், பண்டிதர் செ. துரைசிங்கம், பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் முதலானோர் சொற்பொழிவாற்றுவர். தொடர்ந்துகவியரங்குநிகழும். அருள், அன்பு, குறளாமை, சான்றாண்மை, செங்கோன்மை, பொறுமை, வாய்மை, தாளாண்மை எனும் பொருள்கள் பற்றி முறையே திருவாளர்கள் யாழ்ப்பாணன், க. மாணிக்கம், மு. செல்லையா, செ. கதிரேசபிள்ளை, இ. அம்பிகைபாகன், தில்லைச்சிவன், இ. நாகராசன், மன்னன் கந்தப்பு என்போர்கள் கவி அரங்கேற்றுவர்.

திருவாடடி பரஞ்சோதியம்மாள் இராசமாணிக்கத்தின் திருக்குறள் இசைவிருந்தும் கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி மாணவர்களின் "புதிய பாதை" என்னும் நாடகமும் கடைசியாக நிகழும்.

### மூன்றும் நாள்

சேர் கந்தையா வைத்தியநாதன் 26-5-64 செவ்வாய்க்கிழமைமாலை 6 மணிக்கு மாநாட்டுக்குத்தலைமைதாங்குவார். திருவள்ளுவர் வைதிகநெறியைத் தழுவினர் என்பதை முதலியார் அ. சின்னத்தம்பி, வித்துவான் க. கார்த்திகேசு, பண்டிதர் கா. ஆறுமுகம், திரு. ஈழவேந்தன், திரு. சி. நமசிவாயம்பிள்ளை என்போர் நிலைநாட்டுவர். வைதிகநெறியை அன்று, தமிழ் நெறியையே திருவள்ளுவர் தழுவினர் என்று திரு. புதுமைலோலன், வித்துவான் இ. சி. சோதிநாதன், செல்வி சற்சொரூபவதிநாதன், திரு. நாவேந்தன், திரு. இ. சங்கர் என்போர் வாதிடுவர். கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் சழகத்தவரின் "பாசத்தின் பரிசு" எனும் நாடகத்துடன் மாநாடு நிறைவெய்தும்.

# ஆத்மீக உணர்வு மக்களிடை மலரவேண்டும்

## மகாதேசாதிபதி செய்தி

கொழும்பு, ஞாயிறு

"மனிதன் தனது கண்டுபிடிப்புகளினல் தன்னைத்தானே அழித்துக் கொள்ளாமல் தப்பவேண்டுமாயின் லௌகீக வாழ்க்கை ஆத்மீக வாழ்க்கையின் முக்கியத்துவத்தை மறைக்கவிடாமற் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்று பிரம்ம ஞானசபையின் மகாநாட்டின்போது கவர்னர்ஜெனரல் வில்லியம் கோபல்லாவ அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தி கூறுகிறது.

அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இன்று விஞ்ஞானத்துறையிலும் வாழ்க்கை முறையிலும் ஏற்பட்டு வரும் தீவிர மாற்றங்கள் ஆத்மீக வாழ்வின் முக்கியத்துவத்தை மனிதன் உணராதவாறு செய்யமுயல்கின்றன. மனிதன் இவற்றின் தாக்குதல்களாற் செயலிழந்து இறைவனை மறந்து இவற்றிற்கு அடிமையாகக் கூடாது.

எல்லாச் சமயங்களும் நமக்கு நன்மையே நாடுபவை. சமயங்களனைத்தும் ஒன்று சேர்ந்து ஆத்மீக உணர்வை மக்களிடையே நிலைநாட்ட முன்வர வேண்டும்.

## கலென் தோட்டத்தில் கைகலப்பு

பதுளை, திங்கள்

இங்குள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளருக் கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் நால்வர் காயமடைந்தனர். தேயிலைச்செடியைக் கத்திரிக்கும் கத்தியும் கைகலப்பின்போது உபயோகிக்கப்பட்டதாம். செல்லம்மா, காவேரி, பங்காரி, பெருமாள் ஆகியோர் பலத்த காயங்களுடன் பதுளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பாலையா என்ற தொழிலாளி சந்தேகத்தின்மீது கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞர். இந்நிலையில், சைவசித்தாந்தத்தை பரம்பரையாகக் கற்றுணர்ந்த செனெட்டர் நடேசபிள்ளையைப் போன்ற ஒருவர், தொடர்ந்து சொற்பொழிவாற்றுவதாயின், அதை சிறப்பாக பல சமயபாட ஆசிரியர்களும் கேட்க ஆவலுடன் கூடுவதில் வியப்பில்லை. இதைக் கற்க இது நல்லதோர் வாய்ப்புமாகும்.

ஆகமம் என்றால் ஆப்த வாக்கியமென்றும், பெரியோர்கள் கூறியதென்றும், சைவசித்தாந்தத்திலே இவ்விதமுள்ள பல பரிபாஷை சொற்களையும் முதலில் நன்ருக விளங்கிக்கொள்ளவேண்டுமென்றும், விளங்கப்படுத்தினர் அவர். மிகவும் கடினமான இவ் விஷயங்களை தெளிவாகப் புரிய வைத்தார் பிள்ளை.

மாதம் ஒன்று என்பதை இரண்டாக்கினர். அடுத்த பிரசங்கம் இம்மாதம் 31-ந் திகதி நடக்கிறதாம். வாரம் ஒரு முறை வைத்தாலும் மிகவுதவியாக இருக்குமென்றனர் சில ஆசிரியர்கள்.

* * *

காதலாகி கசிந்து கண்ணீர்
மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்
குய்ப்பது
வேதம் நான்கிலும் மெய்ப்
பொருளாவது
நாதன் நாமம் நமச்சி
வாயவே

— திருஞானசம்பந்தர்.

REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
Richard Harrison
in
Gladiators Seven
Techniscope - Eastman colour)

அடுத்த திரை விருந்து
எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
நானும் ஒரு பெண்
இந்திய ஜனதிபதியின் வெள்ளிப் பதக்கம்
பெற்ற சிறந்த சித்திரம்.

வெற்றிகரமான 8வது வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) லக்ஷ்மி (கரவெட்டி)
மற்றும் 8 திரைகளில்



எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
நடித்த
பெரிய இடத்துப் பெண்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன் — பண்டரிபாய்
நடித்த
பராசக்தி

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மே மாதம் 19-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.